தி.மு.க. அயலக அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - எ.வி.எச். ரஹமத்துல்லா 141/154, சோளக்கடை வீதி, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - பா. ரஞ்சித்குமார் 385, நடேசன் நகர், வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். மணி பண்ணாடிபுதூர், காடையூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. சண்முகவேலு 145/2ஏ, அபிராமி நகர், 2 தச்சன் சாலை, எல்லீஸ் நகர் அஞ்சல், தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638657. 2) சு. செல்வக்குமார் 1/29, இல்லியம்புதூர், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். விஸ்வநாதன் 6/95, மொட்ரபாளையம், கீரனூர் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 4) ஏ.பி. சந்திரமோகன் 23, எம்.எஸ்.பி. நகர், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 5) க. சதீஷ் 3/12, மேற்குபாளையம், எடக்கல்பாடி - 639202, திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - ரா. கார்த்திக்குமார் 3/73, எப். விளாமரத்துப்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642207, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஏ. காதர் அலி 3/104, மெயின் ரோடு, குமரலிங்கம், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642204.

அமைப்பாளர் - கே. சண்முகசுந்தரம் 15, விவேகானந்தர் நகர், காந்திபுரம், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. அப்துல் இரகீம் 28, மகபூக்கான் லே அவுட், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) பெ. மோகன் 629, வடக்கு தெரு, கடத்தூர் அஞ்சல், மடத்துக்குளம் வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642203. 3) பி. சந்திரன் 226, விநாயகர் நகர், உடுமலைப்பேட்டை சாலை, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம். 4) தா. சௌந்தர்ராஜ் போடிபட்டிபுதூர், போடிபட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642154. 5) முருகவேல் 3/28, விநாயகர் கோவில் வீதி, குடிமங்கலம் அஞ்சல், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642201. 6) க. மோகனசுந்தரம் 35ஏ/16, சீனிவாசா வீதி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - அ. ஜான்சன் 7/84, சந்ததி தெரு, வடக்கன்குளம் - 627116, திருநெல்வேலி.

அமைப்பாளர் - ஏ. ஜோசப் சந்திரன் மெயின் ரோடு, ராஜகிரிஷ்ணாபுரம், லேவிஞ்சிபுரம் - 627114, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. மணி 126/201, சந்தனமாரியம்மன் கோவில் தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 2) எஸ். பாசில் பக்கீர் மைதீன் 7பி/17, கீழகட்டளை தெரு, கோவில்பத்து, களக்காடு - 627501, திருநெல்வேலி. 3) குமரன் 8/225பி, ஊசிகாட்டான் தெரு, காவல்கிணறு, திருநெல்வேலி.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டடி.கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **எஸ். ஞானமணி**, (23, குளத்தங்கரை தெரு, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்) அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக **ஜி.ரவிக்குமார்,** (வந்தவாசி சாலை, பழம்பேட்டை, சேத்துப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம் - 604801) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

திருப்பத்தூர் மாவட்டம்

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் செயலாளர் ஒப்புதலோடு திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஹமீதுத்தீன் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **மு. ராஜேந்திரன்** (3, சிவன்படை வீதி, வளையல்கார தெரு, ஆம்பூர், திருப்பத்தூர்.) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்களாக **செ. நாகூர் மீரான்,** (5/2, கிழக்குத் தெரு, சித்தார் கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்). **மு. அஹமது இப்ராஹிம்** (கூரியூர், அச்சுந்தன்வயல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23-02-2026.

எம்.எம்.அப்துல்லா,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி.

இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை!

தமிழ்ச் சொந்தங்களுக்காக - நம் குரல் தொடர்ந்து ஒலிக்கும்!

வலைதளப் பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, பிப்.25-

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 90 வீடுகளைத் திறந்துவைத்த பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "இலங்கை தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியுரிமை பெறும் வரை நம் குரல் தொடர்ந்து ஒலிக்கும்" எனச் சூளுரைத்துள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

இலங்கைத் தமிழ்ச் சொந்தங்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை வழங்கி வருகிறோம்!

நிரந்தரக் குடியுரிமையும் பெற்றுத் தரப் போராடுவோம்!

- **இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள்,**
- **அவர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில 3 கல்வியாண்டுகளில் 5,771 மாணவர்களுக்கு 11.07 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகை,**
- **சுயஉதவிக் குழுக்களுக்கு நிதி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்டவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் பேணி வருகிறது, நமது திராவிடமாடல் அரசு!**

நீண்டகாலமாக இந்திய மண்ணில் வசித்து வரும் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய குடியுரிமையை இந்திய அரசு விரைந்து வழங்கும் என எதிர்பார்க்கிறோம். அதுவரை நம் குரல் தமிழ்ச் சொந்தங்களுக்காகத் தொடர்ந்து ஒலிக்கும்!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் - என

கடந்த 5 ஆண்டு கால கழக அரசில் - 124 அமைப்புகள்!

சட்டப்பேரவையில் — அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

சென்னை, பிப்.25 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, வினா ஒன்றுக்குப் பதிலளித்த செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், "தமிழ்நாட்டில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்தாண்டு கால கழக அரசில் - அரங்கங்கள், மணி மண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இதுகுறித்து கூறியதாவது :-

இந்த அரசு 2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு 5 ஆண்டு காலத்திலே ஏறத்தாழ அரங்கங்கள், மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுத் தூண்கள் என்கிற வகையிலே 124 அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அதில் சில பணிகள் நடைபெற்று வருகின்றன. சில பணிகள் இன்னும் ஒரு 10 நாட்களுக்குள் சில சிலைகள் எல்லாம் திறக்கப்படவிருக்கின்றன. ஆனால், 5 ஆண்டு காலத்திலேகூட அல்ல, 10 ஆண்டுகாலத்தில் 2011 முதல் 2021 வரை மணிமண்டபங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் என்கிற வகையில் 30 எண்ணிக்கையில்தான் அது அமைக்கப்பட்டன. ஆனால் இந்த 5 ஆண்டு காலத்திலே 124 அமைப்புகள் இன்றைக்கு உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.

மாதவரம் வடக்குப் பகுதியில்

'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' வீடு வீடாக சாதனைகள் விளக்கி பிரச்சாரம்!

புழல் எம். நாராயணன் துவக்கி வைத்தார்!

மாதவரம், பிப்.25-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதியில் தமிழ் நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி வெல்லும் தமிழ் பெண்கள் என்கின்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் உள்ள பாகங்கள் வாரியாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி நடைபெறுகின்ற பிரச்சாரம் அனைத்து வட்டங்களிலும் எழுச்சியுடனும் உற்சாகத்துடனும் நடைபெற்று வருகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டத்திற்குட்பட்ட வடபெரும் பாக்கம், செட்டிமேடு, கொசப்பூர், தீயம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள பாகங்கள் 161,162, 163, 182, 183 ஆகிய பாகங்களில் வட்டச் செயலாளர் கே கருணாகரன் தலைமையில் வட்டநிர்வாகிகள் சி. மூர்த்தி, சி.பாலாஜி, வி.பார்த்தசாரதி, முன்னாள் கவுன்சிலர் என். கவிதா நாராயணன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், பாக முகவர்கள் கே. சண்முகப்பிரியன், வி.சுமீர், ஜி.கார்த்திக், டி. திவாகர், எம். மைக்கேல் என்கின்ற மோகன்ராஜ், பி செந்தில் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

வெல்லும் தமிழ் பெண்கள் பாகத்திற்கு ஐந்து பேர் வீதம் 25 பேர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட டைரியை வழங்கி சாதனைகளை எடுத்துக் கூறி வீட்டு உரிமையாளர் அனுமதியுடன் ஸ்டிக்கர்களை வீடுகளில் ஒட்டினர். சென்ற இடமெல்லாம் திராவிட மாடல அரசு தொடர வேண்டும் என்றும் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சாதனைகளை விளக்கி கூறினார்கள்.

அதைக் கேட்டுக் கொண்ட பொதுமக்களும், பெண்களும், பெண்களுக்கென்று ஆயிரம் ரூபாய், இலவச மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், தற்போது ஐந்தாயிரம் ரூபாய் வரவு வைத்தது உள்ளிட்ட அனைத்து சாதனைகளையும் நாங்கள் மறந்து விடவில்லை என்றும், மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக திரு. மு க ஸ்டாலின் அவர்கள் வர நாங்கள் அயராது உழைப்போம் வாக்களிப்போம் என்று உறுதியளித்தனர்.

தொடர்ந்து பாக முகவர்களும் வெல்லும் தமிழ் பெண்களும் அனைத்து வீடுகளுக்கும் சென்று சாதனைகளை விலக்கி பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். நிகழ்ச்சியில் ராஜாத்தி, திவ்யா, கவிதா, பங்கஜம், ரேவதி, சத்யா, நளினி, செல்வி, சாந்தி, சத்திய பானு, அமலா, செல்லக்கிளி, உமா மகேஸ்வரி, அம்மு, பார்வதி, யோகேஸ்வரி, செல்லம்மாள், ரத்தினம், புஷ்பா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. திருநெல்வேலி மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்

தொ.மு.ச. அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. திருநெல்வேலி மண்டலத்தின் (பதிவு எண். 486/TNI, பேரவை இணைப்பு எண். 227) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 21.02.2026 அன்று தமிழ்நாடு மின் கழகத் தொ.மு.ச. தலைவர் **திரு. ச.நடராசன்** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர்- வெ.முருகன் FM 4706 தூத்துக்குடி நகரம், பொதுச்செயலாளர்-ஆ.தர்மன் மத்திய அலுவலகம், பொருளாளர்-S. சுடலைமுத்து TMS 8428 தாமிரபரணி, துணைத் தலைவர்கள்-1) K.சுந்தரராஜ் Dr&Cr 10143 தாமிரபரணி, 2) R. வெங்கடசாமி DI 10497 தலைமை அலுவலகம், 3) A. சௌந்திரராஜ் D 12170 புறவழிச்சாலை, 4)S.கிருஷ்ணமூர்த்தி C 9799 விளாத்திகுளம், 5) R. சுப்பையா C 9703 புளியங்குடி

துணைப் பொதுச்செயலாளர்கள்- 1) N.மகாவிஷ்ணு FM 46092 தொழிற்கூடம் 2) M. கணேசன் D 8545 சேரன் மகாதேவி 3)M.சிவனுபாண்டியன்C 8136 கட்டபொம்மன் நகரம் 5) M. ஜாகீர் உசேன் TMS 10792 செங்கோட்டை 6) P. செல்வம் D 9748 திருவைகுண்டம், தலைமை நிலையச் செயலாளர்-V. மாரியப்பன் D 8298 திருச்செந்தூர், அமைப்புச் செயலாளர்-M.கருப்பசாமி TMS 4691 தூத்துக்குடி நகரம்,பிரச்சார செயலாளர்- A. முருகன் CI 7596 மத்திய அலுவலகம்.

துணைச் செயலாளர்கள் -1) S. உலகநாதன் TMS 8406 தூத்துக்குடி புறநகரம் 2) J.ஜெகன் D 11329 பாபநாசம்,3) M.மணிகண்டன் C 9309 தென்காசி, 4) P.பண்டராகண்ணு C 11418 சங்கரன்கோவில், 5) P.ராமமூர்த்தி C 9334 திருச்செந்தூர், 6) S.செந்தில்குமார் C 9133 சங்கரன்கோவில் 7) M.முத்தையா C 11174 புளியங்குடி.

இடம்:கலைஞரகம்
நாள்:23.02.2026

மு.சண்முகம்
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - தென்றல் ஆ. சேகர் 25, சீத்தாதங்கபவன இல்லம், நேரு நகர் - 2, எஸ்.வி. புரம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642223, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜி.எஸ். மயில்சாமி 131, விநாயகர் கோவில் வீதி, கோமங்கலம் அஞ்சல், பொள்ளாச்சி - 642107, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். பாலசுரேஷ் 4/158எ, அமராவதி மெயின் ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642112.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. முத்துவேல் 3/92 (3/107), விநாயகர் கோவில் வீதி, சிவசக்தி குடியிருப்பு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) ஜா. ஷாஜாதீ பர்வீன் 5, 4, பண்டிதர் சந்து, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) ம. கலைச்செல்வன் உடையார்பாளையம், காரத்தொழுவு, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642203. 4) வீ. கருணாநிதி 8/68, இந்திரா நகர், ஜல்லிப்பட்டி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642112. 5) ச. பாரதிசெல்வன் 33ஏ, செல்லமுத்து நகர் விரிவு, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி - 642004. திருப்பூர் மாவட்டம். 6) ப. கருப்புச்சாமி 117, மெயின் ரோடு, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642113. 7) எஸ். ஞானசேகர் 7, காளியம்மன் கோவில் வீதி, கிருஷ்ணாபுரம், மடத்துக்குளம் - 642111, திருப்பூர் மாவட்டம்.

சேலம் கிழக்கு மாவட்டம்

சேலம் கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வரதராஜன் அவர்கள் ஆத்தூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **திரு.சு.மனோகரன்** (242/3, கூட்டுறவு வங்கி அருகில், செல்லியம்பாளையம், ஆத்தூர், சேலம்) அவர்கள் **சேலம் கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வ.மணிமாறன் அவர்கள் ஆரணி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **எஸ்.பாபு** (1/83, வ.உ.சி. தெரு, கொருக்காத்தூர் கிராமம், வாழப்பந்தல் அஞ்சல், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 632 318.) அவர்கள் **திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக **வே. ராஜேந்திரன்** (பள்ளபச்சேரி, திருப்புல்லாணி அஞ்சல், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23-02-2026.

வாகை சந்திரசேகர்,
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்டம் பாகம் எண் 201 இல் வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக சென்று தமிழ்நாடு முதலமைச்சரின் திராவிட மாடல் அரசு சாதனைகளை எடுத்துச் சொல்லி குடும்பத் தலைவிகளுக்கு டைரி வழங்கி வீடுகளின் முகப்பில் ஸ்டிக்கர்களை ஒட்டினார்கள். மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பாக முகவர் சுந்தரி, வெல்லும் தமிழ் பெண்கள் பாரதி, குணசுந்தரி, ஹேமலதா, ஜோதி, சுந்தரி, சி.பாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.முத்துசாமி

பிப்ரவரி 25 (2018)

மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.